

14.11.2026 செய்திகள்

திவ்யா, தேஜஸ்வினுக்கு 'அர்ஜுனா'

» திவ்யா கலக்கல்

- உலக கோப்பை செஸ் தொடரில் சாம்பியன் ஆன முதல் இந்திய வீராங்கனை திவ்யா, 2024 செஸ் ஒலிம்பியாட் தொடரில் தங்கம் வென்ற அணியில் இடம்பெற்ற விதித் சந்தோஷ் குஜ்ராத்தி, 2023 ஆசிய விளையாட்டில் வெள்ளி வென்ற 'டெகாத்லான்' வீரர் தேஜஸ்வின் ஷங்கர் உள்ளிட்டோருக்கு ஜனா திபதி திரவுபதி முர்மு, விருது வழங்கினார்.
- தவிர, பிரியங்கா, முகமது அஜ்மல் (தடகளம்), நரேந்தர் (குத்துச்சண்டை), ராஜ்குமார் பால், லால் ரெம்கியாமி (ஹாக்கி), சுர்ஜீத், பூஜா (கபடி), அகல் ஷியரோன் (துப்பாக்கி சுடுதல்), ஏக்தா பயான் (பாரா தடகளம்), தனுஷ் ஸ்ரீகாந்த் (காது கேளாதோர் துப்பாக்கி சுடுதல்) ருத்ரான்க் ஷ் (பாரா துப்பாக்கி சுடுதல்) உள்ளிட்டோரும் விருது பெற்றனர்.
- வாழ்நாள் சாதனையாளருக்கான அர்ஜுனா விருது, முன்னாள் கால்பந்து வீரர் அருமைநாயகத்திற்கு, 84 வழங்கப்பட்டது.
- சிறந்த பயிற்சியாளருக்கான துரோணாச்சார்யா, வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை தர்மேந்திர யாதவ் (குத்துச் சண்டை), விரேந்தர் குமார் (மல்யுத்தம்), சிறந்த பயிற்சியாளருக்கான துரோணாச்சாரியா விருது பர்வீர்சிங் (தடகளம்), சோட்டேலால் யாதவ் (குத்துச்சண்டை) உள்ளிட்டோர் பெற்றனர்.

வங்கக் கடலில் உருவானது புதிய காற்றழுத்தம் புயலுக்கு 'அக்வான்'

- மத்திய அந்தமான் கடல் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவிய வளிமண்டல சுழற்சி, நேற்று காலை காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவானது.
- தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் இது நிலவுகிறது. இந்த அமைப்பு, வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடையும். அதன்பின், நாளை மறுதினம் புயலாக வலுவடைய வாய்ப்புள்ளது.
- இந்த புயல், வடக்கு ஆந்திரா மற்றும் ஒடிசா நோக்கி செல்ல வாய்ப்புள்ளது. தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாவதால், இந்த புயலின் நகர்வு, வடமேற்கு நோக்கி செல்கிறது.
- தெற்கு அல்லது தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதிகள் உருவானதால், அது புயலாக மாறும்போது, தமிழகம் நோக்கி வரவாய்ப்புள்ளது. உருவாகும் இடம் அடிப்படையிலேயே இவற்றின் நகர்வு அமைகிறது.
- வங்கக்கடலில் மேற்பரப்பு வெப்பநிலை அதிகமாக இருப்பதால், தற்போது அடுத்தடுத்து காற்றழுத்த தாழ்வு பகுதிகள் உருவாகின்றன.
- வடகிழக்கு பருவமழை முடியும் வரை, தொடர்ந்து காற்றழுத்த தாழ்வு பகுதிகள் உருவாக வாய்ப்புள்ளன.